# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் தேதி, புதன்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 27 ஆம் நாள்

CC No.300/2022
(CNR No: TNAL070023322022)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>ஜெயங்கொண்டம் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 337/2022. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | அஜித்குமார் (27/2026), த/பெ.கணேசன்,<br>அய்யனார் கோவில் ஏரி தெரு, ஜெயங்கொண்டம்<br>உடையார்பாளையம் தாலுக்கா,<br>அரியலூர் மாவட்டம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 19.09.2022 | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 20.09.2022 | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | 20.09.2022 | 23.09.2022 |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 29.09.2022 | |
| 7 | கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றச் சாட்டு வனைந்து வினவப் பட்ட நாள் | : | 14.12.2022 | |

<table>
<tr><td>8</td><td>கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td>:</td><td colspan="3">1) எதிரி தரப்பில் தரப்பில் U/s.320 Cr.P.C ன் கீழ் 05.08.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.04/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.</td></tr>
<tr><td rowspan="3">9</td><td rowspan="3">வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப் பட்ட நாள்</td><td rowspan="3"></td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>05.08.2026</td><td>05.08.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>05.08.2026</td><td>05.08.2026</td></tr>
<tr><td>10</td><td>எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td>:</td><td colspan="3">06.08.2026</td></tr>
</table>

இவ்வழக்கு கடந்த 29.09.2022 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 12.08.2026ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி.C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகிவும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

1. கடந்த 19.09.2022ம் தேதி இரவு 21.00 மணியளவில் புகார்தாரர் தனது வீட்டுடன் கூடிய கல்லூரி வளாகத்தில் இருந்தபோது அங்கு வந்த எதிரி கல்லூரி வளாகத்தின் முன்பாக நின்றுகொண்டு அசிங்கமாக திட்டி கொண்டிருந்ததை புகார்தாரர் கேட்டதற்கு எதிரி புகார்தாரரை பார்த்து நீ யாருடா தேவடியா மகனே நீ கல்லூரி வைத்திருந்தால் பெரிய அளூ புண்டையா என்று அசிங்கமாக திட்டி, அருகில் கிடந்த கட்டைகழியை எடுத்து இனிமேல் நீ என்னிடம் ஏதாவது பேசினீன்னா இந்த கட்டையாலே அடித்து கொன்றுவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்தும், ஆஸ்டலில் தங்கியிருந்த கல்லூரி மாணவிகளை பார்த்து எங்க என்னடி வேடிக்கை பார்க்கிறீங்க என்று திட்டி மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ள எதிரியின் செய்கையானது இ.த.ச.பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு

பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் அதனை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படியும், வழக்கினை கோப்பிற்கு எடுத்துக் கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலணை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 320ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கில் உள்ள குற்ற பிரிவுகள் சமாதானம் ஆகாத குற்றம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:–**

7. அ.சா.1 முத்துக்குமரன் தனது சாட்சியத்தில் சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் தன் வீட்டுடன் கூடிய நர்சிங் கல்லூரி வளாகத்தில் இருந்தபோது, அங்கு கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த கும்பலில் யாரோ தன்னை அசிங்கமாகப் பேசி, கட்டையால் தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தனக்கும் ஆஜர் எதிரிக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாலும், அவர் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும்,

அவர்தான் தன்னை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரி மீது போலீசாரிடம் புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்ததுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.2 ஆதி தனது சாட்சியத்தில் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.நாகராஜன் என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கின் புகார்தாரர் எதிரிகளுடன் சமாதானமாகி விட்டபடியாலும், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, அவர் தயார் செய்து வைத்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 20.06.2019 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு.நாகராஜன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, முத்துக்குமரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் அ.த.சா.ஆ.2 ஐ பெற்று, நிலைய குற்ற எண் குற்ற எண் 337/2022, ச/பி. 294(b), 506(2) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குணா, ஸ்ரீராம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.த.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில், குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடியபோது, எதிரியை 20.09.2022 ம் தேதி 18.30 மணிக்கு ஜெயங்கொண்டம் அண்ணா சிலை அருகில் வைத்து கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து, 21.09.2022 ம் தேதி எதிரியின் மீது ச/பி. 294(b), 506(2) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியமளித்துள்ளார்.

9. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுவிட்டதாலும், அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள் 2 முதல் 10 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என்று கருதி மேற்குறிப்பு செய்ததன் பேரில் அந்த சாட்சிகளை விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

10. எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

11. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

12. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

## தீர்வு

13. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் கடந்த 19.09.2022ம் தேதி இரவு 21.00 மணியளவில் எதிரி அ.சா.1ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், கட்டைகழியை எடுத்து கொலைமிரட்டல் விடுத்ததாகவும், கல்லூரி மாணவிகளை பெண் என்றும் பாராமல் அசிங்கமாக திட்டி மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதாக கூறிவிட்டு அதற்கு முரண்படும் வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் தன் வீட்டுடன் கூடிய நர்சிங் கல்லூரி வளாகத்தில் இருந்தபோது, அங்கு கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த

கும்பலில் யாரோ தன்னை அசிங்கமாகப் பேசி, கட்டையால் தாக்கியதாகவும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தனக்கும் ஆஜர் எதிரிக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாலும், அவர் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்தான் தன்னை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரி மீது புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தான் எதிரியோடு சமாதானமாகிவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

15. அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், எதிரி தான் அ.சா.1ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ, கட்டை கழியை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாகவோ, கல்லூரி மாணவிகளை பெண் என்றும் பாராமல் அசிங்கமாக திட்டி, மன உளைச்சலை ஏற்படுத்தியதாகவோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.

16. எனவே, இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 அரசு தரப்பு வழக்கையும், வழக்கு சம்பவத்தினையும் சார்ந்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் சம்பவம் பற்றி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. முடிவாக எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரவு 248(1)ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

19. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

20. இவ்வழக்கின் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. எனவே, அதுகுறித்து உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் நாள் புதன்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-P.Kanimozhi)

நீதித்துறை நடுவர் எண்.1,

ஜெயங்கொண்டம்.

<u>அட்டவணை : –</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

அ.சா.1 – முத்துக்குமரன்

அ.சா.2 – ஆதி, காவல் உதவி ஆய்வாளர்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>

அ.த.சா.ஆ.1 – புகாரில் உள்ள கையெழுத்து

அ.த.சா.ஆ.2 – புகார் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.4 – பார்வை மகசர்

அ.த.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள்</u> : இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u> : இல்லை

<u>குறிப்பு:</u>

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி எதிரிக்கும், காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
4. தீர்ப்பின் உண்மை நகல் மாண்புமிகு அரியலூர் மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(P.Kanimozhi)

நீதித்துறை நடுவர் எண்.1,

ஜெயங்கொண்டம்.

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.